பஞ்சவடி ஆஞ்சநேயமாலை

பதிப்பாளர்

கு. சுபாஷிணி

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2007

பஞ்சவடி ஆஞ்சநேயமாலை

'சுவடியியல் மற்றும் பதிப்பியல்'-பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பு

கு. சுபாஷிணி

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

நெறியாளர்

வீ. அரசு

பேராசிரியர் – தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னைப் பல்கலைக்கழகம்
தமிழ் இலக்கியத்துறை
சென்னை–5
2007

சுவடியியல் மற்றும் பதிப்பியல்
பட்டப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேட்டு எண்:

நெறியாளர் சான்றிதழ்

முனைவர் வீ. அரசு
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005.

'பஞ்சவடி ஆஞ்சநேய மாலை' எனும் தலைப்பிலான தாள்சுவடியைச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் எனும் பட்டயம் பெறுறுதற்காக கு. சுபாஷிணி அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர் தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நாள்: நெறியாளர்

இடம்:

(வீ. அரசு)

பதிப்பாளர் உறுதிமொழி

கு. சுபாஷிணி
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை 600 005.

'சுவடியியல் மற்றும் பதிப்பியல்' எனும் பட்டயப்பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெறும் 'பஞ்சவடி ஆஞ்சநேயமாலை' எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது எனது உறுதியளிக்கிறேன்.

நாள்: பதிப்பு மாணவர்

இடம்:

(கு. சுபாஷிணி)

நன்றியுரை

சென்னைப் பல்கழகத் தமிழிலக்கியத் துறையில் சுவடியியல் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டய படிப்பிற்கு என்னைத் தேர்வு செய்து, "பஞ்சவடி ஆஞ்சநேய மாலை' எனும் தாள் சுவடியைப் பதிப்பிக்க அனுமதி அளித்து நெறிப்படுத்திய நெறியாளர், தமிழிலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.தமிழ் மொழித்துறை விரிவுரையாளர் முனைவர் அ. பாலு அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடப் பாடுடையேன்.

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பிற்கான பயிற்சி வகுப்புகள் நடத்திய பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுவடியில் உள்ள ஐயங்களைக் களைந்து பெரிதும் உதவிகள் புரிந்த, திரு வை. சிவநேசன், திருமதி ந. ஆனந்திஆகியோர்க்கும் இல.கணேசன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளடக்கம்

1. முன்னுரை	*1-15*
2. பஞ்சவடி ஆஞ்சநேயமாலை	*16-42*
3. செய்யுள் முதற்குறிப்பு அகராதி	*43-46*
4 அருஞ்சொற்பொருள்	47–50
5. சொல்லடைவு	*51-60*
6. துணை நூல்கள்	61

முன்னுரை

தமிழ் மொழி பழமை வளமும் புதுமை நலமும் பொருந்தியது. அத்தகைய பழமை வளம் பொருந்திய இலக்கியங்கள் சுவடிகளில் எழுதப் பட்டுள்ளன. இத்தகைய சுவடிகள் வீடுகளிலும், கோயில்களிலும், சுவடி நூலகங் களிலும், மடங்களிலும் பாதுகாக் கப்பட்டு வருகின்றன. இச்சுவடிகள் அனைத் தையும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டு மெனில் அவற்றை அச்சில் கொண்டு வருதல் இன்றியமையாத ஒன்றாகும்.

இதைக் கருத்தில் கொண்டு சென்னைப் பல்கலைக்கழகம் ஆண்டு தோறும் "சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய" வகுப்பைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. 2006 — 2007 ஆம் ஆண்டு இதற்காக நடத்தப்பட்ட பட்டய வகுப்பில் பதிப்பிப்பதற்காகச் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடியியல் நூலகத்தில்

உள்ள “பஞ்சவடி ஆஞ்சநேய மாலை” என்னும் தாள் சுவடி பதிப்பித்து அளிக்கப்படுகிறது.

இச்சுவடி மூலபாட ஆய்வின்வழி சுவடி வேறுபாடு, பாடவேறுபாடுகளை அறியவும், உண்மைப் பாடத்தை நிறுவவும் பெரிதும் உதவுகின்றன.

நூல் அமைப்பு

மாலை இலக்கியம் பொதுவாக 30, 50, 70, 100 என்ற எண்ணிக்கை முறைப்படி பாடப்பெறும். ஆனால் இந்நூல் காப்புச் செய்யுள் நீங்கலாக வாழ்த்துச் செய்யுளுடன் சேர்த்து 53 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. இறைப்பெயர் சார்த்தியும் இடப்பெயர் சார்த்தியும் வழங்ககும், திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை, ,திருத்தணிகை ஐங்கர மாலை, சீரங்க நாயக மாலை முதலிய நூல்களைப் போன்றே இந்நூலுக்கும் "பஞ்சவடி ஆஞ்சநேய மாலை" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்நூலின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், பணிவோம் நாமே, வணங்குவோமே, அனுமன் வாழ்க, வேண்டுவோமே, வாழ்வாரே, வாழ்வானே என்று பாடப்பட்டுள்ளது.

யாப்பு

எதுகை, மோனை நயத்துடன் யாப்பமைதியோடு அறுசீர் விருத்தத்தால் இந்நூல் சிறப்பாக அமையப் பெற்றிருக்கிறது.

மொழிநடை

மக்கள் விரும்பிப் படிக்கும் வண்ணம் எளிய மொழி நடையில் அமைந்துள்து.

நூலாசிரியர் குறிப்பு

"பஞ்சவடி ஆஞ்சநேய மாலை" என்னும் இந்நூலின் ஆசிரியர் நா. கனகராச ஐயர் ஆவார். இவர் திரு. நாராயண ஐயங்கார், உ.வே.சா. இருவரிடமும் தமிழ் கற்றவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் புலமையுடையவர். இவர் கவிராச பண்டிதர் என்ற பட்டம் பெற்றவர். வித்துவான், எம்.ஏ. முதலிய பட்டங்களைப் பெற்று புதுக்கோட்டை, குடந்தைக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். இவர் இலட்சத்திற்கும் மேற்பட்ட செய்யுள்களை இயற்றியுள்ளார். இவர் சிற்றிலக்கியங்களையே மிகுதியாக இயற்றியிருப்பினும் வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார். கவிச் சக்கரவர்த்தி கம்பன் பால் ஈடுபாடு கொண்டவர். அவர் கவிதையிலே திளைத்து இன்புறும் பேறும், வாய்ப்பும்

உடையவர். கம்பன் கருத்தும், சொல்லும் அங்கங்கே இவர் செய்யுள்களில் ஒளிவிடக் காணலாம். "பஞ்சவடி ஆஞ்சநேய மாலை" என்னும் இந்நூலிம் சில இடங்களில் கம்பராமாயணத்தின் சாயல் படிந்திருப்பதைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக கம்பராமாயணத்தில் சூர்ப்பனகைப் படலத்தில் கோதாவரியின் பொலிவு குறித்துக் கூறும் போது,

புவியினுக்கு அணிஆய், ஆன்ற பொருள் தந்து புலத்திற்று ஆகி

அவி அகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி,(கம்பரா. 2732)

என்ற வரிகளில் வரும் சிறப்பு செய்தியே பஞ்சவடி ஆஞ்சநேய மாலையில் இருக்கும் பின்வரும் வரிகள் எடுத்துரைக்கின்றது.

புவியினுக் கணியே யாகிப் பொருள்மிகு புலத்திற்று ஆகிஅவியகத் துறைக ளோடே ஐந்திணை நெறியிற் சென்ற (பஞ்ச.ஆஞ்ச.மாலை 1)

நூலின் சிறப்பு

இந்நூலினுள் புராரியின் அமிசம் வாய்ந்த ஆஞ்சநேயனின் புகழ், வீர தீர செயல்கள், பஞ்சவடியின் சிறப்பு, கோதாவரியின் பொலிவு, புராணச் செய்திகள் போன்ற கருத்துகளும், இராவணன் சீதையை கவர்ந்து சென்று சிறையில் வைத்திருந்த காலத்தில் சீதைக்கும், இராமனுக்கும் ஒரு இணைப்பு பாலமாக விளங்கியதை அறியமுடிகிறது.

இவர் இயற்றிய வேறு நூல்கள்

பரணி

சூரசங்காரப் பரணி, இலங்கைப் பரணி முதலியன.

பிள்ளைத்தமிழ்

பெரியநாயகி பிள்ளைத்தமிழ், கம்பன் பிள்ளைத்தமிழ், திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ், சடகோபர் பிள்ளைத்மிழ்.

மாலை

மாங்குடியாண்டவன் நான்மணி மாலை, திருச்சிராப்பள்ளி தாயுமானவர் மாலை, அங்கயற் கண்ணி அருள்வென்ன மாலை, அத்தினாபுரம் ஆஞ்சநேயன் மாலை.

அந்தாதி

புவனேஸ்வரி அந்தாதி, காசி முதல் ராமேஸ்வரம் வரையுள்ள இறைவி மேல் பாடிய 20 அந்தாதிகள்.

புராணம்

சுந்தரர் புராணம், ஆஞ்சநேய புராணம்.

செய்யுள் நாடகம்

மறைந்த மாநகர், சிவாஜி விஜயம் முதலியன.

வசன நூல்கள்

தமிழ்ப்புலவர் வரலாறு, பாண்டிய மன்னர், சோழமன்னர், விசுநாதன், இராமாயணத் திரிவேணி.

இவர் இயற்றிய அனுமத் புராணம் 6,000 பாக்களை உடையது.

'தம்ம பதத்'தைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

'உபநிடதம்' முழுவதையும் ஜனமித்திரன் இதழில் ஆசிரியப்பாவில் எழுதி வெளியிட்டுள்ளார்.

இவை மட்டுமல்லாது கண்ணகி வழக்குரை, தேவி திருவாயிரம், சதாசிவ முனிவர் சரிதம், மூவர் மும்மணிக்கோவை, போன்ற நூல்களும், ஸ்கந்தகிரி முருகன் மீது இருபதுக்கும் மேற்பட்ட பிரபந்தங்களும் பாடியுள்ளார்.

சுவடிப்பதிப்பு

சுவடிப்பதிப்பு முன்னோடிகளின் அனுபவக் கருத்துகளின் நன்மை தீமைகளை ஆய்ந்து சிறந்த பதிப்பு முறையை மேற்கொள்ள வழிவகை செய்கிறது. யாப்புநெறி, கடின சந்திமுறை, நூலின் ஆய்வுரை, அடிக்குறிப்பு முறை ஆகியவற்றிலும் பயிற்சியளித்து பதிப்புப் பணியில் அனுபவம் பெறச் செய்கிறது. இவ்வாறான கருத்துக்களை ஆய்வு செய்து சுவடிப் பதிப்புக்கான பலவகை முடிவுகளைக் காண்பதே சுவடி ஆய்வின் நோக்கமாகும்.

மாலை —பொருள்

மாலை என்ற சொல் தொகுக்கப் பட்டது என்று பொருள்படும். மாலை என்ற சொல் தொடுத்த பூந்தொடை, வரிசை, பாசம், மாதரணி வடம், பிரபந்த வகை, பெண், விறலி என்று பல பொருள்களைக் கொண்டு

விளங்குகிறது. இங்கு மாலை என்ற சொல் 'பிரபந்த வகையைக் குறிப்பதாக அமைகிறது.

'மாலை' என்னும் பிரபந்த வகை 19 ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகும். ஒரு பொருளைக் குறித்து ஒரேயாப்பில் 30, 50, 70, 100 என்ற எண்ணிக்கையில் பாடப்பெறுவது மாலையாகும். அகராதி மாலை, அங்க மாலை, அந்தாதி மாலை, அனுராக மாலை, அக்ஷர மாலை, சிலேடை மாலை, சோடச மாலை, தண்டக மாலை, பல்சந்த மாலை, புகழ்ச்சி மாலை என்று 24 வகை மாலைகள் உள்ளன. இவை அனைத்திற்கும் பாட்டியல் நூல்கள் இலக்கணம் கூறுகின்றன.

பாட்டியல் கூறும் இப்பலவகை மாலைகள் போன்றே தமிழ் இலக்கியங்களிலும் பல மாலை இலக்கியங்களை காண முடிகின்றது. பல்வகை பிரபந்தங்களின் தோற்றுவாயாக இருந்த பக்தி இலக்கிய

காலத்தில் இவ்வகை இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவற்றுக்குச் சான்றாக திருமூலரின் திருமந்திரமாலை, அப்பரின் அங்க மாலை, காரைக்கால் அம்மையாரின் திருவிரட்டை மணிமாலை போன்றவை திகழ்கின்றன. மாலை இலக்கியங்களின் பாடல்கள் அனைத்தும் ஈற்றில் ஒரே சொல்லைக் கொண்டு முடிவதும், அச் சொல்லால் நூலின் பெயர் அமைவதும் பொதுத்தன்மையாக விளங்குகின்றன. தண்டபானி சுவாமிகள் இயற்றிய 'சீரங்கநாயக மாலை', கவிராசன் கந்தன் என்பவர் இயற்றிய 'திருத்தணிகை ஐங்கர மாலை' போன்ற இலக்கியங்கள் இவ்வகைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. ஈற்றில் ஒரே சொல்லைக் கொண்டு முடியாமலும் பல நூல்கள் உள்ளன. சான்றாக பிச்சை இப்ராஹிம் புலவர் இயற்றிய 'திருமதீனத்து மாலை' என்பதாகும்.

இவ்வாறாக பல மாலைகள் தோன்றி, பின்னர் அவை பல நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ளன.

பஞ்சவடி — திருத்தல வரலாறு

பஞ்சவடி என்ற இடத்தில் பஞ்சமுக ஸ்வருபம் கொண்ட ஸ்ரீ ஹநுமனை பல நூற்றாண்டுகளாக மக்கள் வணங்கி வழிபட்டதாக அஷ்டமங்கள தேவப்ரஸ்னம் கூறுகிறது. பல சித்தர்களும், முனிவர்களும் இங்கு வசித்துத் தவமியற்றியுள்ளனர். வேத சாஸ்திரங்களை ரிஷிகள் உபதேசித்துள்ளனர். நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் இந்த க்ஷேத்திரத்திற்கு வந்துள்ளனர். அவர்கள் மேம்பட்ட கல்வியறிவிற்காகவோ ஸ்ரீஹநுமனை வணங்கி வழிபடுவதற்காகவோ அல்லது தங்களை பீடித்துள்ள நோய்களில் இருந்து விடுதலை பெறவோ இந்த புனித க்ஷேத்திரத்திற்கு வந்துள்ளனர். ஆனால், காலப்போக்கில்

ஏற்பட்ட பௌதிக மாற்றங்களாலும், சமூக வீழ்ச்சியாலும் இந்தப் புனித இடம், இருந்ததே தெரியாமல் அடியோடு மறைந்து விட்டது. இன்று "பஞ்சவடீ" மறுபடியும் புனருத்தாரணம் பெற்றுவிட்டது அதன் பழைய பெருமைகளையும், புகழையும் நிலைநாட்டு வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திருக்கோயில் உருவாக மூலகாரணமாக இருந்தவர் ஆஞ்சநேய பக்தரான ப்ரம்மஸ்ரீ ரமணி அண்ணா அவர்கள். தெய்வீகக் கட்டளையின் பேரில் அவர் இக்கோயிலை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். சென்னை நங்கை நல்லூரில் உள்ள விஸ்வரூப ஆதிவ்யாதிஹர ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கோயில்உருவாக முல காரணமாக இருந்தவரும் இவரேயாவார். ப்ரம்மஸ்ரீ ரமணி அண்ணா அவர்கள் ஒருமுறை பண்ருட்டியில் நடைபெற்ற பஞ்சமுக ஸ்ரீஹநுமன் ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது, வீரவல்லி திரு.எஸ். சந்தானம் ஐயங்கார்

என்பவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவரது நிலத்தைப் பார்வையிட்டு வருவதற்காகச் சென்றார். அப்போதுதான் அங்கு அந்த அதிசயம் நிகழ்ந்தது. அந்த நிலத்தில் ப்ரம்மஸ்ரீ அண்ணா அவர்கள் காலடி வைத்ததும், ஒரு அமானுஷ்யமான தெய்வீக சக்தி பிரவாகமெடுத்து தன்னை ஆட்கொள்வதை உணர்ந்து மெய்சிலிர்த்தார். இந்த இடத்தில் தனக்கு ஓர் ஆலயம் நிர்மாணிக்க வேண்டுமென ஸ்ரீஹநுமன் அசரீரியாகக் கட்டளை இட்டார். மீண்டும் மீண்டும் ஸ்வாமி அவ்வாறு கட்டளையிட்டார். அவர் தனது எண்ணத்தை ஸ்ரீமான் வீரவல்லி சந்தானம் அவர்களிடம் தெரிவித்தார். “ப்ரம்மஸ்ரீ அண்ணா அவர்களின் சித்தப்படியே ஆகட்டும்” என்று, நெகிழ்வோடு தனது நிலத்தைத் திருக்கோயில் கட்ட ஸ்ரீமான் வீரவல்லி சந்தானம் ஐயங்கார் உடனடியாக வழங்கினார். இவையெல்லாம் பஞ்சமுக ஸ்ரீஹநுமனின் க்ருபையாலும், பொது மக்களின் ஆதரவாலும் நடைபெற்று வருகின்றன.

இத்திருக்கோயில் திண்டிவனம் - பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலையில் 29 - வது கிலோமீட்டர்

தூரத்தில் உள்ள பஞ்சமுக ஸ்ரீ ஹநுமன் கோயில் ஒன்று உருவாகி வருகிறது. பாண்டியில் இருந்து 9 கிலோ மீட்டர் தூரத்தில் இவ்விடம் உள்ளது. இங்கு உலகிலேயே மிக உயரமான பஞ்சமுக ஸ்ரீ ஆஞ்ஜநேயர் திருவுருவச்சிலை ஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது.

சமய ஒற்றுமைக் குறித்து

பஞ்சவடி திருத்தலத்தில் விநாயகருக்கு தனி சன்னதி உள்ளது. இதன் காரணம், பல்லவர்கள் காலத்தில் யானைகள் பெருமளவில் இந்த பகுதியில் வளர்க்கப்பட்டது. யானைகளின் பிரசவங்கள் இங்கு நடந்ததாகவும் எனவே அதற்குரிய கடவுளான விநாயகர் சிலை இங்கு பிரதிஷ்டமம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. எனவே இத்தலம் சைவ, வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

பஞ்சவடி ஆஞ்சநேய மாலை

காப்பு

கோதா வரிக்கரையிற் கோலமிகு பஞ்சவடி
சீதா வளவரச் சீதலத்தை - மேதாவி
ஐந்துமுகத் தஞ்சனைசேய் அன்புபெறு மாலைசேரல்
மைந்துதரும் வேழமுக மன்.

புவியினுக் கணியே யாகிப்
பொருள்மிகு புலத்திற் றாகி
அவியகத் துறைக ளோடே
ஐந்திணை நெறியிற் சென்ற
கவியென நடந்த யாற்றின்
கரையில்ஐம் முகத்தோ டுள்ள
கவிமிகு மாஞ்ச நேயன்
சரண்மலர் பணிவோம் நாமே (1)

மாதருக் கரசி கோதா
வரியினை முகத்தால் நோக்கிக்
காதலுக் கரச னான
காகுத்த னழகை நோக்கும்
பூதலக் கயிலா யத்தே
புராரியின் அமிசம் வாய்த்த
மாதவத் தாஞ்ச நேயன்
மலரடி வணங்கு வோமே (2)

இந்துபோல் முகத்தின் செல்வி
இராகவன் தேவி அந்நாள்
வந்துபோம் வழியிற் கோதா
வரிநதி பெருகக் கண்டே
ஐந்துநன் முகத்தாய் பஞ்ச
வடியிலே அமர்ந்த வாயு
மைந்துற மகனே நின்னை
மனமுற வணங்கு வோமே (3)

ஆலினின் மரங்கள் சாயை

அளித்தருள் விபினக் கண்ணே

மாலினை மணந்த தேவி

மறைபுகழ் சனகன் செல்வி

காலினின் நடந்த யாற்றின்

கரையினை நோக்கா நிற்கும்

காலினின் மிகுத்த வேதக்

கவியினை வணங்கு வோமே (4)

வடதரு வைம்மை யோங்கி

வளர்ந்த நற்றலத்தின் கண்ணே

மடவரல் சீதை வாழ்ந்த ம

ருங்கெலாம் விழியை நாட்டும்

வடமலை யனைய தோளில்

வானரப் படைமா வீரன்

அடல் விளங் கியலைந் தான

ஆரிய அனுமான் வாழ்க (5)

திருப்பணி பறிந்த தேவன்
சிரஞ்சீவி பரமே நல்கப்
பொருப்பணி புயங்க ளோடு
பொலிவுறும் யாற்றில் கொட்டிய
விருப்பணி முகங்க ளைந்து
விளங்குமா ருதியைப் போற்றித்
கருப்பணி யிழியு ருமை
காக்கென வேண்டு வோமே (6)

கணையாழி தந்து சீதை
கனிந்தருள் மணியைப் பெற்றே
கணையாயும் வில்லி முன்பு
கதைகளை விளக்கும் நாவான்
மணையாக வமைந்த பஞ்ச
வடிவேரிற் தலைவ னோடே
துணையாக விருந்தான் தொண்டன்
சொல்லலான் மணம்வாழ் வாறே (7)

தொல்வல தூதர் தம்முள்
துணையிலாத் தூதன் ஆனான்
வில்வல வேந்தன் போர்க்கு
வியன்பெரும் பரியும் ஆனான்
மல்வல அரக்கர் வேந்தன்
மயங்கவே முந்தும் கைபரன்
எல்வல முகமைந் தோடை
எழிற்பஞ்ச வடிவாழ் வானே (8)

ஆழியை மறைத்துக் கொண்டே
யாழியைக் கடந்தி லங்கை
ஏழிசை வல்லான் மன்னர்
இராவணன் இலங்கை எய்தி
வாழியர் என்று தேவி
வாழ்த்துரை பொருத்தி மீண்டான்
யாழிசை தேர்ந்த ராணி
இணையடி வணங்கு வோமே (9)

வளமிகப் பெருகு கோதா
வரிக்கரை ஐந்தர லத்தின்
வளநிழல் வழங்கும் மரங்கள்
வகுத்துள கோயிற் கண்ணே
இளவள முகங்க ளைத்தோ
டிருக்குநம் மாஞ்ச னேயன்
உளமயப் புகுந்த தெய்வம்
உலகமே புரப்ப தன்றே (10)

சத்திய மூர்த்தி யான
தசரத குமாரன் தேவி
மத்திய நீதி கேளரப்
பாவியின் சிறைக்கன் னைதல்
பொத்திய விழியாற் பார்த்தும்
பொருமளத் தாஞ்ச நேயன்
மத்திய நெஞ்சம் கண்டு
பணிகின்றேன் பரவு வேனே (11)

நதிகோதா வரியின் பாங்கர்
நலங்கொள் பஞ்சவடிக் கண்ணே
மதியினை வசிக்கும் தேசம்
மனத்தினால் தேர்ந்து வாழும்
கதிதரு பாதம் கொண்ட
கவியினை அனுமன் தன்னை
துதிவரு செப்பு னரவே
தொழுதனம் வாழ்த்து வோமே (12)

சானகி மறைந்து கொண்ட
தலமிது காண்மி னென்றே
வானரு நாசிக் கோயில்
வாழ்வுறு மன்னர் காட்டும்
தேனரு தீர்த்தம் உள்ள
திருநதிக் கரையை நோக்கி
வானர வீரன் பஞ்ச
வதனத்தை வணங்கு வோமே (13)

ஐந்துமா முகங்க ளோடு
        மைந்துநீள் வடத்தின் பாங்கர்
மைந்துவாழ் புயங்கள் கொண்ட
        மாருதி நிற்கும் சூழல்
இந்துபோல் முகத்தி சீதை
        இனிய கோதா வரிக்கே
வந்துபோம் நெறியின் கண்ணே
        வாய்த்தது காணும் நெஞ்சே (14)

சுந்தர காண்டத் துள்ளே
        சுந்தரி செவியி லேறச்
சுந்தர ராமன் மேனிச்
        சொக்கெலாம் விளக்கிக் கூறும்
சுந்தரன் ஆஞ்ச நேயன்
        தோன்றுசா னகியே வாழ்ந்த
சுந்தர ஐந்தாய் நீழல்
        தோன்றுமால் என்னே என்னே (15)

சீதையின் திருமே னிக்கே
        செறிந்துள அழகுக் கொன்னை
காதையிற் கிட்கிந் தைக்கரம்
        காண் டத்தே இவன் வாக்கால்
யாதை தீம்நந்தா யேறும்
        இதனை பாங்கிவாய் சென்றே
மாதை யேதெரு சென்ற
        மாருதி பைந்தாற் கண்ணே (16)

மாதருக் கரசி பஞ்ச
        வடியிலே வாழ்ந்த வாழ்வின்
காதையைக் கருத்தச் செல்வன்
        கனிவொடு முரைக்கக் கேட்ட
கோதறி யாத வுள்ளக்
        கோடா வாழ்க்கை வீரன்
மாதரை வாழ்த்தி யின்று
        வைகுவன் நதியின் கோடே (17)

மதியினை மயக்கும் கோதா
வரியினை நாசிக் கின்கண்
விதியின துதவி யாலே
வேண்டிய பேறு பெற்றே
பதியினை இறைவ னென்று
பாவித்து வாழ்ந்த சீதை
வதிதரு குகையை நோக்கி
மாருதி நோக்கு வாரே (18)

பெரும்பஞ்ச வடியின் முன்னாள்
பெருமகன் இராம னோடு
கரும்பஞ்சொல் மழலைத் தேவி
களித்திருந் ததனை பெண்ணார்
சுரும்பஞ்ச மலரைச் சாய்க்கும்
சூர்ப்பண கையினோர் சூழ்ச்சி
விரும்பந்த நிலத்தில் நிற்கும்
வீரனை நோக்கு வாரே (19)

மும்மைய காண்டத் துள்ளே
முருகியே புகுந்த பாவி
இம்மையு மறுமை தானும்
இராவணன் இழக்கு மாறு
சும்மையை விளைத்துச் சீதை
துயருறச் செய்த சூழ்ச்சி
வெம்மையை மாற்றும் ஞான
வித்தகன் நிற்பான் ஆங்கே (20)

ஐந்துபே ராளின் நீழல்
ஐம்புலன் அடக்கும் வீரன்
ஐந்துமா முகத்த னாகி
அழகுற அமர வாழ்த்தும்
இந்துநேர் சிகரக் கோயில்
இன்றுநாம் காண்கின் றோமால்
மைந்துறு தோள்கள் நோக்கி
வாழ்த்துவோம் வணங்கு வோமே (21)

இதுபஞ்ச வடியாம் காண்க
ஈங்குநீ கவரப் பட்டாய்
இதுகோதா வரியாம் பெண்ணே
ஈதுமூக் கறுத்த தேசம்
அதுமுனம் அரக்கப் பாவி
அரியுண்ட மூக்கை யெண்ண
மதுமலி நாசி கரமும்
மாருதி இரங்கக் காணாம் (22)

இறங்குமா ருதியை நோக்கி
இராகவன் வினவா நிற்கும்
அறங்கெழு பெருந் தோள்வீர
ஆலயம் அமைக்கச் செய்தே
நிறம்பெற வீங்கு நிற்க
நினைதியோ வெனுமுன் வாலின்
புறம்பெற மலையைத் தாங்கும்
பூதியால் ஆமென் றானே (23)

இராமனே அயோத்தி யெய்தி
எழில்மலி முடியும் சூடி
இராமையே பிரிந்த செய்தி
இருசெவி கேட்ட பின்பும்
மராமர மெய்த தோளின்
மன்னனை மறவாத் தூதன்
பராவர திளைந்து பஞ்ச
வடிமுன்பு பதுங்கி னானே (24)

குசலவர் கானம் கேட்ட
குலோத்துங்கன் பொத்திக் கண்ணே
குசலவர் வாழச் செய்து
கோற்றொடி பிரிவை நொந்தே
தசரத பதாதி யோடு
கடும்புணற் சரயு சென்ற
மசரத வாழ்வை நீத்தி
யாவாறே கவியோர்ந் தானே. 25

கவிஞருள் மிகும் வான்மீகி

காவியம் வீணை யோடு

புவிபுகழ் இருவர் பாடப்

புருடவுத் தமனே கேட்க

செவியொடு யிதயம் சுட்ட

சீதையின் பிரிவை யெண்ணி

அவிகமழ் நதியின் பாங்கர்

அனுமனே திக்கு என்றே 26

ஓதையே யிகதீர் ஓடும்

உயர்பெரு நதியின் பாங்க;

சீதையே தெய்வம் என்று

சிந்தனை செய்யும் வீரன்

பாதையே மறந்த போக

வைப்பென ஐந்தாற் பாங்கர்

காதையே நினைத்தே யின்றும்

காட்சியைத் தருகின் றானே. 27

குடிகெட வேண்டு மென்றே
கொடும்பல்லை அதுக்கி வந்த
கொடியசூர்ப் பணங்கை செய்த
கொடும்பெருஞ் சூழ்ச்சி யாலே
துடியிடை சிறையுட் புக்க
தொல்பெரும் பூமி யென்றே
மடியினை யறியா வீரன்
மாருதி வாழ்வா னிங்கே 28

உயரமும் தாழ்வும் ஓராள்
உத்தமற் ருயிரே யாவாள்
அயரவும் மனமே யில்லாள்
அயலவன் சிறையில் வாழ்ந்தும்
துயரமும் அறிபரன் போன்று
அசுநகை முகத்தாற் பேச
மயர்வர நோக்கி வந்த
மாருதி யிங்குள் ளானே 29

யாங்குநீ யிடும்பாய் வீர
என்றுதாய் வினவல் போன்ற
பாங்குற கனவு கண்ட
பக்தசே கரனாம் தூதன்
ஈங்குதான் இருப்பேன் தாயே
என்றுமே நின்னைப் போற்றி
வீங்குதோள் பத்தி னோடு
விளங்குவே னென்றா னன்றே 30

தலையைந்து கொண்ட முக்கண்
தலைவனை முகத்தே காட்டும்
நிலைகொண்ட ஆஞ்ச னேயம்
நிமிரும் தோள்பத்துக் கோடல்
கலைகொண்ட கருத்தா மென்று
கவிஞரே கருத யானே
அலைபொங்கு நதியின் பாங்கர்
அழகுற நிற்கின் றானே 31

ஐந்தலை பத்துக் கையோ
டடியிரண் டொருமை வரலம்
செந்தலை முடிவேண் டாத
சிவமயக் காட்சி காட்டும்
அந்தலை வீரன் சூடும்
அனுமனை ஆற்றின் பாங்கர்
எந்தலை வணங்கும் காலை
யாம்பெறு மின்பம் என்னே 32

ஐந்தெழுத் துவந்த தேவன்
ஐந்துமா முகமே கொண்டான்
இந்தமுத் தியவே ணிக்கண்
ஏற்றினன் கங்கை யாற்றை
வெந்தழற் புகுந்த சீதை
வெளிப்பட வணங்கி நின்றான்
ஐந்தலைத் தலைவன் ஆன
அனுமன் என்றறிவோம் யாமே 33

இலங்கையிற் சீதை வாடல்
இராமனுக் குரைத்த தூதன்
வலங்கையிற் இலச்சினை யேந்தி
வான்வழி வாவி வந்தான்
கலங்கையிற் சனகிக் கன்று
கணையாழி கொடுத்த சூரன்
விலங்கயிற் பொலியும் தேயம்
வியன்கோதா வரிக்கோ டன்றே 34

இன்பமே யில்லா வாழ்வை
இருநிலக் கிழத்தி யீன்ற
பொன்புனை சீதை காண்டல்
புருட்ஷத்த மன்சா பத்தால்
அன்புள கவிகள் கூடி
அரண்மனைக் கழைத்து வந்தார்
வன்புள அனுமான் நின்று
வணங்கினன் பரிசேற் றானே 35

ஆலயம் இராமன் வைக
அவனியில் அநேகம் உண்டே
ஆலயம் அனுமான் வைக
அமைந்தன பயவா மேனும்
மாலயன் மதிக்கும் பஞ்ச
வடியிலே வாயு மைந்தன்
கோலமே நோக்கி நின்று
கும்பிடப் பெறுவோம் யாமே 36

அணிபணி யொன்றும் வேண்டான்
அனுமம பக்தி பூண்டான்
பணியணி பரமன் தானே
பாரிடை யிராமன் துன்பம்
அணிபெணி பொழித்தற் கென்றே
இருநிலத் தடைந்தா னென்று
துணிபணி புலவர் சோர்வர்
தூயவன் அனுமா னென்றே 37

தொழுபவர் வேண்டா முன்னம்
துணைசெயத் தோன்று மன்ப
அழுபவர் அவலம் போக்கி
ஆற்றலை யடுவூம் வல்ப
எழுபவர் எழுச்சி மாற்றி
இறக்கமே நல்க வல்லாய்
பழுதுறு நதியின் பாங்கர்
பலவுவழங்க வாழ் வாயே 38

பாவனன் பிறப்பா லானாய்
பண்புபா வனமே யானாய்
ஆவன வெல்லாம் நன்காய்ந்
தரக்கரை யழித்து மீண்டாய்
மாவன மாகும் பஞ்ச
வடியினுக் கருகில் வாழ்வாய்
தேவனே ஆஞ்ச னேய
சிவமயம் விளக்கி னாயே 39

இராகவ தூத னென்ப
திராவணன் அறியு மாறே
இராகவ பிரதா பத்தை
இசைத்தனை இலங்கை எங்கும்
இராகவ நாம மோதி
இருஞ்சமர் விளைத்து வேண்டும்
விராகமே யுருவமான
வீரஅஞ் சனையின் சேயே 40

சூடையின் மணியை யீந்து
சொல்வன சொற்ற சீதை
ஆடையின் மறைத்து வைத்த
அதுவல தணியி லாமை
வேடையின் மழையே போல
மிளிர் கணையாழி யாலே
ஓடைகண் டனையீண் டாயே
உத்தம வந்த சேயே 41

இளையவன் தன்னை நிந்தித்

திராவணன் சிறைக்குப் போந்த

வளையணி கரத்துச் சீதை

மனநிலை தெளிந்து மீண்டாய்

அளைபுகு மரவே போன்ற

அரக்கரை யழித்த தேரனாம்

விளைவதை நன்கு தேர்ந்தாய்

எமக்குத விவந்த சேயே 42

அம்பினால் துளையே பட்டே

அறத்தின் துருவ மானார்

வம்பினாற் களத்தே சாய

மருத்துமா மலைதந் தாயே

கொம்பினால் தேனை யுண்ணும்

குலத்திலே பிறந்தா யேனும்

வெம்பினால் எதிர்ப்பா ரில்லா

வீரஅஞ் சனையின் சேயே 43

யாரினும் பெரிய னான
இராகவன் தூதாய் வந்தே
நீரினும் வாளக் கண்ணும்
நிகரிலா வலிமை காட்டி
ஊரிலும் பெரியா னென்ற
உயர்புகழ் படைத்தா யன்றே
பேரிலும் பெரியை யானாய்
பெண்ணினம் மறந்தா யன்றே 44

உயர்பஞ்ச வடியின் கண்ணே
ஒருசிறு கோயிற் குள்ளே
அயர்வற நிற்கும் ஊக
ஐந்துமா முத்துத் தேவ
மயர்வறு மதியே யுள்ள
வானர வீர நின்னைத்
துயர்வற வேண்டு வார்க்குத்
துணையென நிற்கு மன்றே 45

நதிகளிற் சிறந்த தாய
நதிகோதா வரியின் கோட்டில்
துதிதவ வண்ணலே பஞ்ச
வடியினை மதித்த வீர
துதிபுகழ் அன்பர் நெஞ்சில்
துயரமே மாற்றி யாளும்
மதிபெரி துடைய வாயு
மைந்தனே வணங்கு வோமே 46

ஆரிய மறியவாம் ஐய
அமுதமாம் தமிழும் தேர்வாய்
சீரிய தெலுங்கும் தேர்வாய்
தெலுங்க நாட்டினிலே பாயும்
வாரிய நதியாம் கோதா
வரியிலே மனத்தை வைத்தாய்
பேரியல் உணர்வார் முன்பு
பெரும்பொருள் அருள் வாயே 47

அனுபம குணத்தா னான

அருக்கமா குலத்து வீரன்

அனுபவ மனைத்து மோர்ந்தே

அவனடிக் கடிமை யாகும்

அனுமனே நின்னைப் போலே

அவன்பணி புரிந்தா ருண்டோ

உணுமுனே மருந்து தந்தே

உயிர்நிறுத் தினைநீ யன்றே 48

ஆரிய னென்னத் தக்க

அருந்திறல் இராமன் முன்னே

சீரிய மரணி போன்று

சிந்துரு வெடுத்து வந்தாய்

நாரியர் இடையே சென்று

நாபக பள்ளி தன்னைத்

தேரிய துணிந்த தேவ

திருமலி வாவி சேயே 49

வளத்திலே மிகுந்த கோதா
வரிக்கரை நாசிக் குண்டு
உளத்திலே சிறந்தார் வாழும்
ஊரது சிறந்த தொன்றே
வளத்திலே மிகுந்த பஞ்ச
வடியிலே அனுமான் வாழும்
தளத்திலே சிறந்த கோயில்
தனைக்கண்டு சூழ்தல் நன்றே 50

ஆலிலை மிதந்த சேயே
ஆனிழல் தேடி வந்தான்
மாலிவன் பின்னே வந்த
மங்கைபூ மகளே ஆவாள்
சாலியின் துணைமை வந்த
தம்பியோ சேடனாவான்
ஆலியாம் நதிச்சா ருள்ள
அனுமனே சிவனா மன்றே. 51

கற்பினுக் கரசி சீதை
கரியசூர்ப் பணகை தூண்ட
வெற்பினும் பெரிய தோளாள்
வெஞ்சிறை புகுந்த காட்சி
நிற்பது போலத் தோன்று
நிலத்திலே கோயில் கொண்டான்
அற்புத வாயு மைந்த
அஞ்சனை செல்வ நன்றே 52

வாழிநீர் மல்கு கோதா
வரியெனும் பெயர்கென் யாறே
வாழியக் கரையிற் பஞ்ச
வடியெனும் புண்ய தேசம்
வாழியத் தேயம் வாழும்
மாருதி ஆஞ்ச னேயன்
வாழியல் வன்னி சீர்மை
வழுத்திய மாலை தானே. 53

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

0. கோதா வரிக்கரையிற்

1. புவியினுக் கனியே

2. மாதருக் கரசி

3. இந்துபோல் முகத்தின்

4. ஆலினின் மரங்கள்

5. வடதரு வைம்மை

6. திருப்பணி பறிந்த

7. கணையாழி தந்து

8. தொல்வய

9. ஆழியை மறைத்துக்

10. வளமிகப் பெருகு

11. சத்திய மூர்த்தி

12. நதிகோதா வரியின்

13. சானகி மறைந்து

14. ஐந்துமா முகங்க

15. சுந்தர காண்டத்

16. சீதையின் திருமே

17. மாருக் கரசி

18. மதியினை மயக்கும்

19. பெரும்பஞ்ச வடியின்

20. மும்மைய காண்டத்

21. ஐந்துபே ராளின்

22. இதுபஞ்ச வடியாம்

23. இறங்குமா ருதியை

24. இராமனே அயோத்தி

25. குசலவர் கானம்

26. கவிஞருள் மிகும்

27. ஓதையே யிகதீர்

28. குடிகெட வேண்டு

29. உயரமும் தாழ்வும்

30. யாங்குநீ யிடும்பாய்

31. தலையைந்து கொண்ட

32. ஐந்தலை பத்துக்

33. ஐந்தெழுத் துவந்த

34. இலங்கையிற் சீதை

35. இன்பமே யில்லா

36. ஆலயம் இராமன்

37. அணிபணி யொன்றும்

38. தொழுபவர் வேண்டா

39. பாவனன் பிறப்பா

40. இராகவ தூாத

41. சூடையின் மணியை

42. இளையவன் தன்னை

43. அம்பினால் துளையே

44. யாரினும் பெரிய

45. உயர்பஞ்ச வடியின்

46. நதிகளிற் சிறந்த

47. ஆரிய மறியவாம்

48. அனுபம குணத்தா

49. ஆரிய னென்னத்

50. வளத்திலே மிகுந்த

51. ஆலிலை மிதந்த

52. கற்பினுக் கரசி

வாழிநீர் மல்கு (வாழ்த்து)

அருஞ்சொற்பொருள்

அணி - அலங்காரம் (1.1)

அவி - உணவு (1.2)

அசூநகை - அசூயை (29.3)

அடல் - வலிமை (5.4)

அமிசம் - பாகம் (2.3)

ஆழி - கடல் (9.1)

ஆல் - மரவகை (4.1)

இந்து - சந்திரன் (3.1)

இராகவன் - இராமன் (3.1)

இருநிலம் - பூமி (35.1)

ஈங்கு - இவ்விடம் (22.1)

ஐந்திணை - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஐவகை நிலங்கள் (1.2)

ஐம்மை - நெருக்கம் (5.1)

ஓதை - ஆரவாரம் (27. 1)

கவி - குரங்கு (4.4)

கணையாழி - முத்திரை மோதிரம் (7.1)

கயிலாயம் - அஷ்டகுலபர்வதங்களில் ஒன்றும் சிவபிரான் வாழ்விடமுமான ஒருமலை (2.3)

காகுத்தன் - ககுஸ்தவமிசத்தில் தோன்றிய இராமன் (2.2)

கிழத்தி - பெண் (35.1)

சரயு - அயோத்திக்கருகிலுள்ள நதி (25.3)

சரண் - பாதம் (1.4)

சாயை - நிழல் (4.1)

சிரஞ்சீவி - அனுமான் (6.1)

சேகரன் - சிறந்தோன் (30.2)

தரலம் - உலகம் (10.1)

தீர்த்தம் - நீர் (13.2)

துறை - இடம் (1.2)

துலை - ஒப்பு (8.1)

துருவம் - ஒப்பு (43.1)

தேயம் - நாடு (34.4)

மா - நிறம் (45.2)

நீள் - நீளம் (14.1)

பதாதி - ஒரு யானையும், ஒரு தேரும், மூன்று
பரியும், ஐந்து காலாட்களும் கொண்ட
சேனைத்தொகுதி (25.3)

பாங்கர் - துணையானவன் (12.1)

பாவி - தீமையாளன் (20.1)

பாவனன் - அனுமான் (39.1)

பாவனம் - தூய்மை (39.1)

பிரதாபம் - வீரம் (40.2)

புவி - மக்கள் (1.1)

புராரி - சிவபிரான் (2.3)

புருடவுத்தமன் - திருமால் (26.2)

புலம் - இடம் (1.1)

பூதி - உடம்பு (23.4)

மடவரல் - பெண் (5.2)

மருங்கு - இடம் (5.2)

மருத்து - வைத்தியம் (43.2)

மறை - வேதம் (4.2)

மாமலை - செடிவகை (43.2)

முத்து - நவமணியில் ஒன்று (45.2)

மைந்து - வலிமை (3,4)

வதி - வழி (18.4)

வன்னி - பிரமசாரி (வாழ்த்து)

வாயு - அஷ்டதிக்குப்பாலகருள் வடமேற்கு
மூலைக்கு அதிபனான தேவன் (3.1)

விபினம் - காடு (4.1)

சொல்லடைவு

அசுநகை'	(29:3)
அஞ்சனை	(52:4)
அடல்	(5:4)
அடிமை	(48:2)
அணி	(1:1)
அதிரம்	(43:4)
அநேகம்	(36:1)
அமிசம்	(2:3)
அமுதம்	(47:1)
அம்பு	(43:1)
அயலவன்	(29:2)
அயோத்தி	(24:1)
அரக்கர்	(8:3)
அரசன்	(2:2)
அரசி	(2:1)
அரண்மனை	(35:3)
அரி	(22:3)
அலை	(31:4)
அவலம்	(38:2)
அவனி	(36:1)
அவியகம்	(1:2)
அழகு	(2:2)
அறம்	(43:1)
அறம்	(23:2)

அறிபரன்	(29:3)
அனுமன்	(5:4)
அன்பர்	(46:3)
ஆஞ்சநேயன்	(1:4)
ஆடை	(41:1)
ஆரியன்	(49:1)
ஆலயம்	(36:1)
ஆலயம்	(23:2)
ஆல்	(4:1)
ஆவணம்	(39:2)
ஆழி	(9:1)
ஆறு	(1:3)
இடுஞ்சமர்	(40:3)
இதயம்	(26:2)
இந்து	(3:1)
இம்மை	(20:2)
இராகவன்	(44:1)
இராகவன்	(3:1)
இரு	(24:2)
இருசெவி	(24:2)
இருநிலக்கிழத்தி	(35:1)
இருவர்	(26:2)
இறைவன்	(18:3)
உத்தமன்	(29:1)
உயரம்	(29:1)
உயிர்	(48:4)

ஊர்	(44:3)
எழில்	(8:4)
எழுச்சி	(38:3)
ஏழிசை	(9:2)
ஐந்தரலம்	(10:1)
ஐந்திணை	(1:2)
ஐந்து	(33:1)
ஓடை	(41:4)
ஓதை	(27:1)
கங்கை	(33:2)
கணையாழி	(7:1)
கதி	(12:3)
கயிலாம்	(2:3)
கரம்	(22:4)
கரை	(1:3)
கலை	(31:3)
கவி	(1:3)
கவிஞர்	(26:1)
கற்பு	(52:1)
கனவு	(30:2)
கனிவு	(17:2)
காகுத்தன்	(2:2)
காட்சி	(27:4)
காட்சி	(52:2)
காதல்	(2:2)
காதை	(17:2)

கானம் (25:1)
கிட்கிந்தை (16:3)
குகை (18:4)
குசலவர் (25:1)
குடி (28:1)
குலம் (43:3)
குலோத்துங்கன் (25:1)
கொம்பு (43:3)
கோதாவி (2:1)
கோயில் (13:2)
கோலம் (36:4)
கோற்றொடி (25:2)
சத்தியமூர்த்தி (11:1)
சரண் (1:4)
சரயு (25:3)
சனகன் (4:2)
சாபம் (35:2)
சாயை (4:1)
சாலி (51:3)
சானகி (13:1)
சிகரம் (21:3)
சிந்தனை (27:2)
சிந்து (49:2)
சிரஞ்சீவி (6:1)
சிவமயம் (39:4)
சிவமயம் (32:2)

சிறை	(11:2)
சீதை	(5:2)
சுந்தரராமன்	(15:2)
சுந்தரி	(15:1)
சும்மை	(20:3)
சூரன்	(34:3)
சூர்ப்பணகை	(19:3)
சூழல்	(14:2)
சூழ்ச்சி	(19:3)
செந்தலை	(32:2)
செய்தி	(24:2)
செல்வன்	(17:2)
செல்வி	(3:1)
செவி	(15:1)
சேகரன்	(30:2)
சேடருபரன்	(51:3)
சேய்	(40:4)
ஞானவித்தகன்	(20:4)
தமிழ்	(47:1)
தம்பி	(51:3)
தலம்	(13:1)
தலைவன்	(7:3)
தளம்	(50:4)
தாய்	(30:1)
தாழ்வு	(29:1)
தீர்த்தம்	(13:3)

துடியிடை (28:3)
துணை (38:1)
துணை (7:4)
துதி (12:4)
துயர் (20:3)
துருவம் (43:1)
துளை (43:1)
துறை (1:2)
துன்பம் (37:2)
தூதர் (8:1)
தூதன் (24:3)
தூயவன் (37:4)
தெய்வம் (10:4)
தெலுங்கு (47:2)
தேசம் (22:2)
தேயம் (34:4)
தேர் (42:3)
தேவன் (33:1)
தேவன் (6:1)
தேவி (4:2)
தேவி (3:1)
தேன் (43:3)
தொண்டன் (7:4)
தோள் (5:3)
நதி (3:2)
நதி (46:1)

நற்றலம் (5:1)
நன்று (52:4)
நாடு (47:2)
நாமம் (40:3)
நிதாக்கர் (39:2)
நிலம் (19:4)
நிலம் (52:3)
நிறம் (23:3)
நீர் (44:2)
நீவடை (41:3)
நீழல் (15:4)
நெஞ்சு (11:4)
பக்தி (37:1)
பஞ்சவடி (3:3)
பதாதி (25:3)
பதி (18:3)
பரமன் (37:2)
பரி (8:2)
பல் (28:1)
பாதை (27:3)
பார் (37:2)
பாவனம் (39:1)
பாவி (11:2)
பிரதாமம் (40:2)
பிரிவு (25:2)
புவி (1:1)

புகழ் (4:2)
புகழ் (26:2)
புனல் (25:3)
புயம் (6:2)
புராரி (2:3)
புருடவுத்தமன் (26:2)
புலவர் (37:4)
புவி (26:2)
புறம் (23:4)
பூதலம் (2:3)
பூதி (23:4)
பூமகள் (51:2)
பூமி (28:3)
பெண்ணியம் (44:4)
பெரியன் (44:1)
பெற்பு (52:2)
பொருள் (1:1)
மகன் (3:4)
மங்கை (51:2)
மடவரல் (5:2)
மணி (7:1)
மணி (41:1)
மணை (7:3)
மரம் (4:1)
மருங்கு (5:2)
மருந்து (48:4)

மலரடி	(2:4)
மலர்	(1:4)
மலை	(23:4)
மழலை	(19:2)
மள்ளர்	(13:2)
மறுமை	(20:2)
மறை	(4:2)
மனநிலை	(42:2)
மனம்	(3:4)
மாதர்	(2:1)
மாதை	(15:4)
மாலயன்	(36:3)
மால்	(4:2)
மாவீரன்	(5:3)
முகம்	(2:1)
முடி	(24:1)
மும்மை	(20:1)
மைந்தன்	(36:3)
ராணி	(9:4)
வதனம்	(13:4)
வதி	(18:4)
வம்பு	(43:2)
வலிமை	(44:2)
வழி	(3:2)
வளம்	(50:1)
வளையணி	(42:2)

வாயு (3:3)
வால் (23:3)
வாழ்த்துரை (9:3)
வானரம் (5:3)
வான்மீகிகாவியம் (26:1)
விதி (18:2)
விபினம் (4:1)
வியன் (8:2)
விராகம் (40:4)
விழி (5:2)
வீணை (26:1)
வீரன் (19:4)
வெஞ்சிறை (52:2)
வெந்தழல் (33:3)
வெம்மை (20:4)
வேதம் (4:4)
வேந்தன் (8:2)
வைம்மை (5:1)

துணை நூல்கள்

1. திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ், ஆராய்ச்சிக் குறிப்பு - ஸ்ரீமான் நா. கனகராஜ ஐயரவர்கள் M.A., M.E.S. த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை - 1953

2. தினமலர், பஞ்சவடி ஆஞ்ஞநேயர் கும்பாபிஷேக மலர் - 2007

3. அடிகளாசிரியரின் இலக்கணப் பணி, முனைவர் பட்ட ஆய்வேடு - க. வெற்றிவேல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

4. இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், மது. ச. விமலானந்தம்

5. கலைக்களஞ்சியம் - தொகுதி -2.